## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 13 (lw– 22) | நாள் | 16.04.2025 |
| பெயர் | பார்த்திபன் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தந்தை பெயர் | பன்னீர்செல்வம் | வயது | 47 |
| கிராமம் | மங்கநல்லூர் | தாலுக்கா குத்தாலம் | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தரங்கம்பாடி தாலுக்கா, கொடைவிளாகம் காலனித் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தற்போது கிளியனூர் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்து வருகிறேன். 2024ம் வருடம் கிளியனூர் கிராம நிர்வாக அலுவலரா பணிபுரிந்தேன். பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலர் விடுப்பில் சென்றிருந்ததால் பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். 05.04.2024 அன்று காலை 5.30 மணியளவில் மயிலாடுதுறை DSP என்னிடம் போனில் பேசினார். மயிலாடுதுறை அஜித்குமார் கொலை வழக்கு சம்பந்தப்பட்ட எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும் பெரம்பூர் காவல்நிலையத்திற்கு வரும்படி சொன்னார். மேற்படி கொலை குற்றத்தில் தொடர்புடைய சந்திரமோகன், சந்திரமௌலி, சதீஷ், ஸ்ரீராம், பாலாஜி, மோகன்தாஸ், சத்யநாதன் ஆகிய ஏழு நபர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக கூறினார். நானும் கிராம உதவியாளர் கண்ணன் ஆகியோர் பெரம்பூர் காவல்நிலையத்திற்கு போன் வந்து ஒரு பத்து பதினைந்து நிமிடத்தில்போனோம். அவர்களை மயிலாடுதுறை DSP விசாரித்தார். முதலில் சந்திரமோகன் என்பவரை DSP விசாரித்து அவர் கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தை டைப் செய்தார். அதில் சந்திரமோகன் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் சந்திரமோகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 7** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சந்திரமோகன் அந்த கொலையை சந்திரமோகன், சந்திரமௌலி, சதீஷ், ஸ்ரீராம், பாலாஜி, மோகன்தாஸ், சத்யநாதன் ஆகிய ஏழு நபர்களும் மேலும் நான்கு நபர்களும் செய்ததாக சொன்னார். அந்த நான்கு நபர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். சத்யசீலன், அஜித்குமார், நாகராஜ், மகாவிஷ்ணு ஆகியோருடன் சேர்ந்து செய்ததாக சொன்னார். அந்த நான்கு நபர்களை தங்களை கைது செய்யும்போது சொல்லவில்லை என்றும் தற்போது தான் சொல்வதாகவும் சொன்னார். சந்திரமோகன் சொன்ன வாக்குமூலத்தை போலவே மற்ற ஆறு எதிரிகளும் சொன்னார்கள். பாலாஜி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 8** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியளார் கண்ணன் உடையது. சதீஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்தார்கள். அதில் சதீஷ் என்பவர் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் சதீஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 9** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர்

கண்ணன் என்பவருடையது. ஸ்ரீராம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்தார்கள். அதில் ஸ்ரீராம் என்பவர் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஸ்ரீராம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 10** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. சந்திரமௌலி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்தார்கள். அதில் சந்திரமௌலி என்பவர் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் சந்திரமௌலி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 11** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. சத்யநாதன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்தார்கள். அதில் சத்யநாதன் என்பவர் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் சத்யநாதன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 12** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. மோகன்தாஸ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்தார்கள். அதில் மோகன்தாஸ் என்பவர் எங்கள் முன்பாக கையெழுத்து செய்தார். அதில் நானும் கிராம

உதவியாளர் கண்ணனும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் மோகன்தாஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த **கையெழுத்து மட்டும் அசாஆ 13** ஆகும். இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. அன்றைய தினமே மாலை 5.30 மணியளவில் மணக்குடியில் உள்ள சதீஷ் வீட்டில் மூன்று கத்தி, ஒரு அரிவாள் கைப்பற்றுதல் மகசரில் எங்கள் முன்பாக கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் கண்ணன் என்பவருடையது. அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 14** ஆகும். நீதிமன்றத்தில் உள்ள மேற்படி வழக்கு சொத்துக்கள் எங்கள் முன்பாக கைப்பற்றப்பட்டவை தான். அந்த மூன்று கத்திகள் முறையே **சாபொ 11 முதல் 13** ஆகும். அரிவாள் **சாபொ –14** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக மயிலாடுதுறை DSP என்னை விசாரித்தார்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

DSP என்னை சாட்சியாக இருக்க அழைத்ததை பற்றி எனது மேல் அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரி. நான் பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்ததற்கு ஆவணம் எதுவும் DSP யிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும், அவர்களும் கேட்கவில்லை என்றால் சரி. அந்த காலகட்டத்தில் நான் பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகிக்கவில்லை என்றால் சரியல்ல. பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலர் பொய் கையெழுத்து செய்ய மறுத்ததால் நான் பெரம்பூர் கிராம நிர்வாக அலுவராக கூடுதல் பொறுப்பு வகித்ததாக சொல்லி என்னிடம் போலிசார் ஆவணங்களில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் கையெழுத்துபோட்டதாக சொல்லும் ஆவணங்களில் ஒரே நேரத்தில் கையெழுத்துபோட்டேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு நேரத்திலும், கைப்பற்றுதல் மகசரில் மற்றொரு நேரத்திலும் கையெழுத்துபோட்டேன். என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லைஎன்றாலும், தடயபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே விசாரித்த முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் இரண்டு மாத காலத்திற்குள் விசாரணையை முடிக்க உத்தரவிட்டுள்ளதால் குறுக்கு விசாரணைக்கு கோரிய காலஅவகாசம் மறுக்கப்படுகிறது. 9ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

16/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

16/4/25